**மத்திய கலாசார நிதியம் - 2013**

-----------------------------------------------------------

மத்திய கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட தனியார் கம்பனியான வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனி, நிதியத்தின் நிர்மாண மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றுவதுடன் மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்காக ரூபா 114.8 மில்லியன் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இக் கம்பனியின் ஒரே வருமானம் நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு மாத்திரமாக இருந்ததுடன் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு நிதியத்தின் இரண்டு பணிப்பாளர்களும், நிதியத்தின் கணக்காளர் ஒருவர் கம்பனியின் கணக்காளராகவும் செயற்படுகின்றனர். மத்திய கலாசார நிதியத்திற்கும் கலாசார பாதுகாப்பு தனியார் நிர்மாணக் கம்பனிக்குமிடையே காணப்படுகின்ற இந்த தொடர்பின் தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

ஐயக் கடன் ஏற்பாடு தொடர்பாக நிதியத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடன் அறவிடும் இயலுமை மீளாய்வு செய்யப்படாமல் முன்னைய ஆண்டின் ஐயக் கடனாக ஒதுக்கப்பட்ட தொகைக்குச் சமனான தொகை அதாவது ரூபா 1,964,833 தொகை மீளாய்வாண்டின் போதும் ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 106,469,071 கிரயமான தளபாடங்கள், பொருத்திகளும் உபகரணங்களும் மற்றும் ரூபா 3,509,828 கிரயமான கட்டிடங்களிலிருந்து பாவனைக்கு எடுக்க முடியுமான சொத்துக்களை இனங்கண்டு அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏலமிடப்பட்ட மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் அழிக்கப்பட்ட உடைந்த பொருட்களின் 6984 அலகுகளின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 98 வாகனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் 39 வாகனங்கள் மாத்திரம் ரூபா 20,940,000 தொகைக்கு மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன. மீள் கணிப்பீடு செய்யப்பட்ட 5 வாகனங்களின் மீள் கணிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 2,055,000 தொகை கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ரூபா 14,252,724 கிரயமான எஞ்சிய 59 வாகனங்களையும் மீள் கணிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வெளிநாட்டு உதவி மானியமாக 1984 முதல் 2004 வரையான காலப்பகுதியில் நிதியத்திற்குக் கிடைத்த 11 வாகனங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 4,064,443 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணியின் உரித்து நிதியத்திற்கு உரித்தற்றமையால் உரித்து தொடர்பாக ஏற்பட்ட வரையறை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சுனாமி நூதனசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 2,558,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட காலி நுககஹவத்தை காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணி கலை, கலாசார அலுவல்கள் அமைச்சுக்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கையளிப்பதற்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டில் மீள் கணிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 1,050,000 தொகை சொத்து மீள் கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படாமல் வெளிநாட்டு வள நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டமை காரணமாக வெளிநாட்டு வள நிதியத்தின் மீதி அப் பெறுமானத்தினால் குறைவாகவும் சொத்து மீள் கணிப்பீடு ஒதுக்கம் அப் பெறுமானத்தினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக செலவிடப்பட்ட ரூபா 3,426,261 தொகை நிதியத்தின் விளம்பரச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,189,480 தொகையான அச்சிடல் பொருட்கள் கொள்வனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பாவனையிலிருந்து அகற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்ட ரூபா 728,050 கிரயமான சொத்துக்களின் பெறுமதி மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன கணக்குகளில் இருந்து அகற்றப்படாமல் ஏல விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 99,650 மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது ரூபா 4,280,060 கிரயமான உப உற்பத்தி மற்றும் உற்பத்திப் பொருட்களும், ரூபா 331,049 கிரயமான பதிப்பு இருப்புக்களும் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன் நன்கொடையாக ரூபா 331,049 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 1,226,680 தொகை விளம்பரச் செலவினமாகவும், ரூபா 3,053,380 தொகை ஏனைய கலாசார செயற்பாடுகளாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. உப உற்பத்தி மற்றும் பதிப்புக்கள் விற்பனை

இலாப கணிப்பீட்டின் போது இந்த நன்கொடைகள் விற்பனைக் கிரயத்தில் கழித்துக் காட்டுவதற்குப் பதிலாக விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, கணிப்பீட்டு வழுவின் காரணமாக பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் ரூபா 5,680,221 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) வெளிநாட்டில் நடைபெற்ற வியாபாரக் கண்காட்சிக்காக சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் விசேட நபர்களுக்கு நன்கொடை அளிப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்ட விற்பனை விலை முறையே ரூபா 314,365 மற்றும் ரூபா 109,720 தொகையான உப உற்பத்தி மற்றும் பதிப்புக்கள் தொடர்பான எவ்வித சீராக்கமும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) 7 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானமான ரூபா 9,269,772 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கெதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறைச் சொத்துக்கள் – நானாவித கடன்பட்டோர் | 420,817 | கடன்பட்டோர் பட்டோலை |
| (ஆ) | நிலுவையான ஊழியர் கடன் | 1,656,741 | 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விழா மற்றும் விஷேட முற்பணம் மற்றும் இடர் கடன் மீதி தொடர்பான விரிவான தகவல்கள் |
| (இ) | பொலன்னறுவை புனித பூமியில் உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்தல் | 29,235,550 | கிரய மதிப்பீடு, பொறியியலாளர் சான்றிதழ், செய்யப்பட்ட வேலையறிக்கை, மற்றும் கொடுப்பனவுப் பட்டியல், மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைக்கான பரிந்துரையும் அங்கீகாரமும் தொடர்பான விபரம் |
| (ஈ) | 10 விஷேட நிதிய செயற்திட்டங்கள் | 8,803,143 | ஒவ்வொரு நிதியத்திற்குரிய விரிவான கோவைகள் மற்றும் உபயோக ஆவணங்கள் |
| (உ) | 3 வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்கள் | 1,969,612 | -மேற்படி- |

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 21 நிரந்தர ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 316,171 தொகையான இடர்கடன், நிரந்தர பதவியணியினரில்லாத தொழிலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 6 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய

ரூபா 366,721 தொகையான இடர் கடன் மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அறவிட வேண்டிய ரூபா 1,290,020 தொகையான விழா மற்றும் விஷேட முற்பணங்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 914,785 தொகையான 15 கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 264,670 தொகையான தீர்க்கப்படாத கட்டு நிதி மீதியும், சீகிரிய செயற்திட்ட அலுவலகத்தால் பல்வேறு நிறுவனங்களுக்கு 1993 – 2000 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 333,373 தொகையான முற்பணம் மற்றும் 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற நீதிமன்ற வைப்பு ரூபா 44,534 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணிப்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| | (i) VII அத்தியாயத்தின் 12.2.6 அம் பிரிவு | பதில் கடமை சம்பளம் செலுத்துவதற்கான அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் 74 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது அங்கீகாரமின்றி ரூபா 2,187,644 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |
| | (ii) XXXIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | நிதியத்தின் உத்தியோகத்தர்கள் பிரதிவாதிகளாக மத்திய கலாசார நிதியத்திற்கு எதிராக வெளிநபர்களால் தொடரப்பட்ட வழக்கின் போது நிதியத்திற்காக செயற்படுவதற்கு சட்டமா அதிபரினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் அதற்குப் புறம்பாக சட்டமா அதிபரின் அங்கீகாரமின்றி வெளியிலிருந்து சட்டத்தரணிகளை சேவைக்குப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 440,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| | (iii) XLVIII ஆம் அத்தியாயத்தின் 22.1 உப பிரிவில் திருத்தப்பட்ட 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய 6/2004 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் பந்தி | 2009 ஆம் ஆண்டின் போது வேலை நீக்கத்திற்குள்ளாக்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்றுப் பரிசோதனை மேற்கொள்ளும் போது விரைவாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாமையால் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 407,719 தொகையான ஆதனக் கடனை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டம் | இந்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆறு மாத 158 பிரயோக பயிலுனர்களுக்காக 1,952,529 தொகை பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ. 01/2010/01 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி மற்றும் 9(II) ஆம் பந்தி | இணைந்த படிகளுக்காக 24 மணித்தியாலங்களும் பூர்த்தியான நாள் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய விமானப் பயண விபரம் (விமானம் பயணச்சீட்டின் பிரதி) சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டுப் பயணத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,482,107 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் அளவு மாதமொன்றிற்கு 170 லீற்றாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக கட்டளை அடிப்படையில் ரூபா 1,112,130 பெறுமதியான எரிபொருள் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு உரித்தற்ற 3 உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் கையளிக்கப்பட்டு மாதமொன்றிற்கு 120 லீற்றர் படி கொடுப்பனவொன்று அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் படிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்காக முறையே ரூபா 263,784 தொகை மற்றும் ரூபா 484,484 பெறுமதியான மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 353(5) ஆம் இலக்கத்தின் 2 ஆம் பந்தி | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 3 வேன் வாகனங்களுக்காக மாதாந்த வாடகை ரூபா 50,000, 45,000 மற்றும் 45,000 ஆக சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. வாகன வழங்குனர்களுடன் எவ்வித எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கையின் 842 ஆம் இலக்கம் | ரூபா 540,536,673 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் வீதியின் உட்கட்டமைப்பு விடயங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தலை ஏற்படுத்துதல், சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றின் நிருவாகத்தை இலகுபடுத்தும் வகையில் அந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 மற்றும் 3.4 ஆம் பிரிவுகள் மற்றும் கொள்வனவுக் கைநூலின் 2.14.1 ஆம் பிரிவு | சந்தை விலை மாற்ற முறைமையின் படி கேள்வி கோரலின் ஆகக் குறைந்த கால எல்லை 7 நாட்களாக இருந்த போதிலும் நிதியத்தின் ஊழியர்களுக்காக 1200 ரீஷேட்டுக்களை கொள்வனவு செய்யும் போது முதலாவது தினத்திலே கூறுவிலை பெறப்பட்டிருந்தது. மேலும் 5 கேள்விதாரர்களுக்கு குறையாத எண்ணிக்கையில் கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும் 3 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அகழ்வு மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளைப் போல அகழ்வுகளின் போது கிடைக்கின்ற தொல்பொருட்களை தம்வசம் வைத்துக் கொள்வதற்காகவும் மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கையளிக்கப்படாமலிருந்த போதிலும் தொல்பொருட்களை அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளுக்கான நேர் மூலப்பொருள் மற்றும் நேர் உழைப்பு ஈடுபடுத்தியதற்காக மத்திய கலாசார நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 434,518,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் கலாசார நடவடிக்கைகள் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் உத்தியோகபூர்வமாக நிதியத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தராவார். இந்த பதவிக்காக படியொன்றைச் செலுத்துவதற்காக அதிகாரச்சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாதிருந்த போதிலும், நிதியத்தால் செயலாளரின் மாதாந்த சம்பளத்தில் 33 1/3 தொகையான மாதாந்தப்படி ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 241,356 ஆகும். இதற்கான தாபன விதிக்கோவை மற்றும் பொது நிதிச்சுற்றறிக்கை என்பவற்றின் படி நிறுவனப் பணிப்பாளரினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 03. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 302,069,092 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்கு நேரொத்த மிகையான ரூபா 227,294,733 தொகையுடன் ஒப்பிடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 74,774,359 தொகையான முன்னேற்றத்தைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதியத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 314,812,779 இனால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கு முரணாக சுற்றுலா நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 399,664,799 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா நுழைவுச்சீட்டு விற்பனை தொடர்பாக அந்த நுழைவுச் சீட்டு அச்சிடல் செலவினம் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 56,299,899 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது ரூபா 4,189,480 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவினம் 92.56 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் அச் செலவினம் அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2291 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் சுற்றுலா நுழைவுச் சீட்டு அச்சிடலுக்காக முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தாமையின் காரணமாக அச் செலவினங்கள் வருடாந்தம் பாரியளவில் தளம்பல்களுக்குள்ளாகியிருந்தது.

(ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின்படி ஏனைய கலாசார செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட பணம் ரூபா 62,345,256 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்தச் செலவினங்கள் அதிகரிப்பு ரூபா 29,429,621 தொகை அதாவது 89 சதவீதமாக இருந்தது. விகாரைகளை நவீனமயப்படுத்துதல்

மற்றும் பெரெஹெராவிற்காக அனுசரணை உதவிகளை வழங்கும் போது அதற்கான நியதிகள், முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படாமையாலும் பாதீட்டுக் கட்டுப்பாடு காணப்படாமையின் காரணமாகவும் இச் செலவின அதிகரிப்புத் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் ரூபா 35,313,462 இனால் அதிகரித்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 112 சதவீதமாக இருந்தது. கணிப்பீட்டு வழுக்கள் இவ்வாறு அதிகரித்தமை தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக உள்ள சட்டவிடயங்கள்

கட்டளையின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் தங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 379,137 தொகை செலுத்தாமை தொடர்பாக அப்பணத்தை அறவீடு செய்வதற்காக வெளி கம்பனியொன்றினால் நிதியத்திற்கு எதிராக 2010 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. மேலும் நிதியத்திற்குரிய வாகனமொன்றின் மூலம் ஏற்பட்ட விபத்தால் ஏற்பட்ட நட்டமாக ரூபா 500,000 தொகை நட்டஈடுகோரி வெளித்தரப்பினரால் 2004 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அமுல்படுத்தப்படாத பணிகள்

(i) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்புடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட 11 அகழ்வு வேலைத்தளங்களின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 6,973,555 தொகையான 2305 வேலை அலகுகளும், 18 பாதுகாத்தல் வேலைத்தளங்களின் மதிப்பீட்டுக் கிரயமான ரூபா 34,502,306 தொகையான 6175 வேலை அலகுகளும் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 28,372,315 மொத்த மதிப்பீட்டுக் கிரயமான 3 பாதுகாப்புப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் போதியளவில் காணப்படாமை

7 செயற்திட்டங்களின் 32 வேலைத் தளங்களுக்காக 25,271 வேலை அலகுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 92,008,696 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 7,216 வேலை அலகுகள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அதற்கான உள்ளபடியான செலவினம் ரூபா 18,543,083 ஆனமையால் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் 30 சதவீத குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) 2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத போதும் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

---

(i) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் (வேலைத் திட்டம்) உள்ளடக்கப்படாத அகழ்வு மற்றும் 31 பாதுகாப்பு வேலைத்தளங்களின் 15,856 வேலை அலகுகளை அமுல்படுத்துவதற்காக ரூபா 43,120,338 தொகை மதிப்பிடப்பட்டு அதில் 12,886 வேலை அலகுகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 30,253,179 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) பொலன்னறுவையில் கல் விகாரையில் மனைகளை நிர்மாணிப்பதற்காக திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 7,294,349 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பௌதீக செயலாற்றல் 30 சதவீதமாக இருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய கலாசார நிதியத்தின் பிரதான வருமான வழியான சுற்றுலா நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையின் மூலம் மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 1,748,439,894 ஆகும். எவ்வாறாயினும் நுழைவுச் சீட்டுக்கள் அச்சிடும் போது தெளிவான மாதிரிகள், போதியளவான பாதுகாப்பு முறைமை மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டிற்காக முறையான திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக நுழைவுச்சீட்டு அச்சிடல், இருப்பினைப் பேணுதல் மற்றும் விற்பனை என்பவற்றில் உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் எழுந்திருந்தது. இலத்திரனியல் பார்கோட் முறைமை (Bar Code System) போன்ற நவீன தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் 2013 – 2016 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் தயாரிக்கும் செயற்பாடுகள் ரூபா 600,000 இற்கு திறன் அபிவிருத்தி நிதியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அத்திகதி முதல் 6 வாரங்களுக்குள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அது 2013 மே 13 ஆந் திகதிய கையளிக்கப்பட்டிருந்தது. தாமதக் கட்டணத்தைக் கழிப்பதற்காக உடன்படிக்கையில் நிபந்தனை உள்ளடக்கப்படாமை நிதியத்திற்கு பாதகமானதாக இருந்தது.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

(அ) தொல்பொருளியல் அகழ்விற்கான அங்கீகாரம்

---

(i) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 06 மற்றும் 07 ஆம் பிரிவுகளின் படி தொல்பொருள் அகழ்வு மேற்கொள்வதற்கு முன்னர் அகழ்வு நிலம் தொடர்பான சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டு தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்படவேண்டிய போதிலும் நிதியத்தால் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 10 அகழ்வு செயற்திட்டங்களுக்கான வேலைத் திட்டம் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக 2013 யூன் 30 ஆந் திகதியே அனுப்பப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட சகல தொல்பொருள் தொடர்பான

அறிக்கையைப் போன்றே அகழ்வு தொடர்பான அறிக்கையும் தயாரிக்கப்பட்டு தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அகழ்வுகளின் போது கண்டறியப்பட்ட விஷேட தொல்பொருட்கள், தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள்

அபயகிரி மற்றும் ஆலாஹன செயற்திட்டங்கள் மூலம் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 3040 GI குழாய்களையும், 4493 மூடிகளையும் மீளப்பெற்றுக்கொள்வதற்கு 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கைதவிர்க்கப்படாத சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதன் படி நிதியத்திற்குச் சொந்தமாகப் பேணப்பட்ட உடைந்த 9 வாகனங்கள் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மதியுரையாளர்களைச் சேர்த்தலும் அவர்களின் சேவையும்

நிதியத்தின் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட மதியுரை பணிப்பாளருக்கும் 14 கட்டிடக் கலை மதியுரையாளர்களுக்குப் படியாக ரூபா 2,396,824 தொகை அண்ணளவாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் தாம் அறிக்கை சமர்பிக்க வேண்டிய முறை தொடர்பாக அவர்களுக்கு விளக்கமான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி நிரந்தர மாதாந்த படியொன்றையும் எரிபொருள் படியொன்றையும் பெற்றுக்கொண்டு அவர்கள் ஆற்றிய சேவைகள் எவ்வாறானது என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பொலன்னறுவை புனித பூமியில் உள்ளக வீதிகளை மீளமைப்புச் செய்தல்

பொலன்னறுவை புனித பூமியில் வெளியேறும் வாயிற்கதவு முதல் உள்ளக வீதியில் 01 கி.மீற்றருக்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 27,500,000 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 29,235,510 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆரம்ப கிரய மதிப்பீடொன்று விளக்க மாதிரிகளுடன் தயாரிக்கப்பட்டு வழங்கப்படாதிருந்த போது அங்கீகாரமின்றி வீதியின் அகலம் 4.5 மீற்றர் முதல் 6.2 மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்திற்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 48,575,893 வரை அதிகரித்திருந்ததுடன் அதற்காக கொள்வனவுக் குழுவின்

அங்கீகாரமும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியில் இடப்பட்டிருந்த கொங்கிரீட் கற்கள் குறிப்பிடப்பட்ட நியமத்தை விட குறைந்த தரமுடையதாக இருந்தும் அக்கற்களுக்காக நிதியத்தால் ரூபா 16,992,545 தொகையான மொத்தப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் நிர்மாணங்களின் தரம் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் படி 90 நாட்களில் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் 652 நாட்கள் கடந்திருந்தும் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த விலை மற்றும் அளவுகளில் முரண்கள், தாமதக்கட்டண அறவீடு மற்றும் நியமங்களுக்குப் புறம்பாக நிர்மாணித்தல் தொடர்பான ஏற்பாடுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையால் நிதியத்திற்கு பாதகமாக இருந்தது.

(ஆ) வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனியிலிருந்து ஊழியர்களைப் பெறல்

---

நிதியத்தின் செயற்திட்டங்களின் சேவைக்காக பயிற்சி பாதுகாப்பு/ அகழ்வு உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்காக மீளாய்வாண்டிற்காக வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்கு ரூபா 114,879,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனியை உருவாக்கும் அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் படி மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்கள் அந்த கம்பனியின் மூலம் சேவையில் ஈடுபடுத்தி அவர்களின் சம்பளத்தை கம்பனியின் மூலம் செலுத்துவது நோக்கமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பனியின் ஊழியர்களுக்கு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கையின் 1 ஆவது பிரிவின் படி ஊழியர்கள் வடமேல் கலாசார சதுக்க செயற்திட்டங்களில் அகழ்வு/ பாதுகாப்பு உதவியாளர்களாக சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ஏனைய செயற்திட்டங்களைப் போன்றே செயற்திட்ட அலுவலகங்களிலும் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) உடன்படிக்கையின் படி நாளொன்றுக்காக பெறப்படுகின்ற மனித ஊழியத்திற்காக நிதியத்தின் மூலம் அக்கம்பனிக்கு ரூபா 1,200 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கம்பனியால் ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 700 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி 2013 சனவரி முதல் திசெம்பர் வரை பெறப்பட்ட 95,732 மனித நாட்களுக்காக ஒரு ஊழியருக்கு நாளொன்றிற்கு ரூபா 500 படி ஆண்டின் போது ரூபா 47,866,000 இலாபத்தை உழைப்பதற்கு கம்பனிக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டங்களின் தேவைக்கு மேலதிகமாக ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உதாரணமாக பண்டுவஸ்நுவர செயற்திட்டத்தின் மிகை ஊழியத்திற்காக ரூபா 4,046,225 தொகையும், ரிதீ விகாரை செயற்திட்டத்தில் ரூபா 8,094,003 தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பணிப்பாளர் நாயகத்தின் நியமனமும் சம்பளக் கொடுப்பனவும்

---

(i) 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்தின்படி பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கின்ற தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் இது வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பணிப்பாளர் நாயகப் பதவியின் பதில் கடமைக்காக பதில் கடமை சம்பளத்திற்குப் பதிலாக தொல்பொருளியல் பேராசிரியருக்கு நிரந்தர பதவியின் சம்பளம் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி மாதாந்தம் ரூபா 162,706 வீதம் மீளாய்வாண்டிற்கான சம்பளமாக ரூபா 1,952,468 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இந்த உத்தியோகத்தரின் நிரந்தர பதவியின் சம்பளத்திற்குரிய கற்கைப் படிகள் (Academic Allowance) மற்றும் ஆராய்ச்சிப்படிகள் (Research Allowance) மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்குரித்தற்றதாக இருந்த போதிலும் தொடர்ச்சியாக நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட அப்படிகளின் மொத்தம் ரூபா 824,003 ஆகும்.

(ஈ) சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம்

---

(i) போட்டி விண்ணப்பங்கள் கோரப்படாமல் மத்திய கலாசார நிதியத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக 2013 யூன் 01 ஆந் திகதி முதல் புதிய உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி காணப்பட வேண்டிய தகைமை காணப்படாதிருந்த போதிலும் சட்ட உத்தியோகத்தர் பதவிக்குரிய சம்பளத் தொகுதியின் ஆரம்பச் சம்பளத்துடன் அரசாங்கத்தினதும் மத்திய கலாசார நிதியத்தினதும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளையும் உள்ளடக்கி 2014 மே 31 வரையில் செலுத்தப்பட்ட மொத்தச் சம்பளம் ரூபா 422,786 ஆகும்.

(ii) 2014 மே 31 ஆந் திகதியில் சேவைக் காலம் முடிவடைகின்றமையால் விண்ணப்பம் கோரி தகுதியான ஒருவர் நியமிக்கப்படும் வரை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் அவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட ஆளுநர் சபையின் அங்கீகாரத்திற்கு முரணாக பணிப்பாளர் நாயகத்தால் அவரின் சேவைக்காலம் மேலும் 02 வருடங்களுக்காக நீடிக்கப்பட்டு முன்னர் போன்றே சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) நிதியத்திற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது, அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை தொடர்பாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2011 மார்ச் 25 ஆந் திகதிய BD/NI 177/2/9/02/CCF ஆம் இலக்க கடிதத்தின் படி பணிப்பாளர் நாயகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 4.5 மில்லியனாக இருந்த போதிலும் அந்த எல்லையை விஞ்சி ரூபா 2.48 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. மேலும் பணிப்பாளர் (நிதி) மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் ஆகியோருக்காக 2 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திராத போதும் அதற்காக ரூபா 15.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) பிரிவென்வெல ஓலைச்சுவடி ஆவணங்களை அபிவிருத்தி செய்வதற்காக யாபஹுவ செயற்திட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஓலைச்சுவடி கற்பிப்பாளருக்கு மாதாந்தம்

ரூபா 20,000 படியொன்றும் 100 லீற்றர் பெற்றோலும் மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஓலைச்சுவடி ஆவணங்களை அபிவிருத்தி செய்வதற்காக அவர் நிறைவேற்றிய கடமைகள் என்ன என்பது தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

**4.5 வெளிப்படையான மோசடிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களுடன் இலவசமாக வழங்குவதற்காக DVD வழங்குதல்

---

வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களுடன் இலவசமாக வழங்குவதற்காக சீகிரிய, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற புனித தலங்களை உள்ளடக்கிய 5 இலட்சம் DVD களை தயாரித்து வழங்குவதற்காக ரூபா 51,099,925 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய ஒப்பந்தக்காரரால் இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் சீகிரியவை உள்ளடக்கிய பதிவு செய்யப்பட்ட திரைப்படங்களின் காட்சிகளை கணனிப் பிரதிகளில் மீளத் தயாரித்து புதிய வடிவமைப்புடன் மோசடியான வகையில் இந்த DVD படங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ii) DVD தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வி நியாயமான காரணமின்றி கவனத்தில் கொள்ளாது ஆகக்கூடிய கேள்வி தெரிவு செய்யப்பட்டமையால் நிதியத்திற்கு ரூபா 18,125,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தக்காரால் இந்த பாடவிடயங்கள் தொடர்பாக இதற்கு முன்னர் வழங்கிய ஒப்பந்தத்திற்குரிய ரூபா 4,701,000 தொகையான உடன்படிக்கையொன்று மீறப்பட்டிருக்கும் போதும் அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் அவர்களுக்கு பெறுமதிசேர் வரியுடன் (VAT) முழுத் தொகையான ரூபா 5,191,150 தொகையான கொடுப்பனவு தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளிலும் விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அந்த விடயங்கள் கருத்தில் கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டிருந்தது.

(iv) உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது தாமதக் கட்டணம் மற்றும் பெறுமதி சேர் வரிக் (VAT) கொடுப்பனவுகளுக்குரிய நிபந்தனை ஒப்பந்தக்காரருக்கு சாதகமான முறையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே கேள்விப் பிணை மற்றும் செயலாற்றல் பிணைகள் முறையே ரூபா 446,250 தொகை மற்றும் ரூபா 2,281,250 தொகையாக குறைவாகப் பெறப்பட்டிருந்தது.

(v) கிரய மதிப்பீடு தயாரித்தல், மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் விஷேட நிபுணத்துவம் உடைய மதியுரையாளரால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கொள்வனவு ஆவணங்கள் விஷேட நிபுணத்துவம் உள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட DVD

தகைமையுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர் வரியைச் செலுத்துவதற்காக போலியாக வரி இலக்கமொன்றை விலைப்பட்டியல்களில் உள்ளடக்கி நிதியத்திலிருந்து மோசடியாக பெறுமதி சேர் வரியாக ரூபா 5,474,999 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்கான நியமனமும் படிக் கொடுப்பனவும்

---

மத்திய கலாசார நிதியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காததும் மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படாததுமான செயற்பாட்டு பணிப்பாளர் பதவிக்காக 2006 ஆம் ஆண்டின் சனவரி முதல் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டு அத்திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை மாதாந்த படியாக ரூபா 4,494,105 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(i) நிதியத்தின் உள்ளபடியான பதவியணியினரில் பணிப்பாளருக்கு உரித்தான சம்பளத் திட்டத்தில் ஆகக்கூடிய சம்பளப் படி நிலையில் ஒரு சம்பள ஏற்றத்திற்குக் குறைவாக மாதாந்தப் படியொன்று அவருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த உத்தியோகத்தர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளராக நிரந்தர பதவியிலும் கடமையாற்றி அந்த நிறுவனத்திலிருந்தும் முழுமையாகச் சம்பளம் மற்றும் படிகளாக மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் ரூபா 5,076,836 தொகை பெற்றிருந்தார். மேலும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளருக்கு உரித்தான சகல வரப்பிரசாதங்களைப் போலவே அரசாங்க சேவை சம்பள அதிகரிப்புக்களின் போது நிதியத்தின் படியையும் அதே விதத்தில் அதிகரித்து நிலுவைத் தொகையுடன் பெற்றிருந்தார்.

(iii) 2006 முதல் மீளாய்வாண்டு வரை மத்திய கலாசார நிதியத்தால் ஒதுக்கப்பட்ட 2 வாகனங்களை அவ்வப்போது பயன்படுத்தி மாதாந்தம் 120 லீற்றர் படி எரிபொருள் படியும் பெற்றிருந்தார். மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் பெறப்பட்ட எரிபொருள் படி ரூபா 949,618 ஆக இருந்தது. அந்தக் காலத்திற்காக தொழிற்பயிற்சி அதிகாரசபையிலிருந்தும் ஒதுக்கப்பட்ட வாகனமொன்றிற்கும் மாதாந்த எரிபொருள் படியைப் பெற்றிருந்தார்.

(இ) கிரவல் கொள்வனவு – சீகிரிய செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சீகிரிய செயற்திட்டத்தில் உள்ளக வீதிகளைத் திருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,718,125 தொகையில் கிரவல் கொள்வனவு செய்வதற்காக கேள்விச் சபை அங்கீகாரமின்றி பதிவு செய்யப்படாத வழங்குனருக்கு கூறுவிலை கோரல் கடிதம் அனுப்பி வெளிப்படையாக அன்றி வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ii) கேள்வி ஆவணக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை சமர்ப்பிக்காத வழங்குனரின் கேள்வியும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ரூபா 718,125 பெறுமதியான கேள்வியொன்று கேள்விப்பிணை சமர்ப்பிக்காத வழங்குனருக்கும், ரூபா 500,000 தொகையான கேள்வியொன்று, கேள்வி ஆவணக் கட்டணம் சமர்ப்பிக்காத வழங்குனருக்கும் கையளிக்கப்பட்டிருந்தன.

(iii) இந்த கூறுவிலை பெறும்போது, மீளாய்வாண்டில் மாத்தளை மாவட்ட விலைக்குழுவின் விலையின் படி 1 கியூப் கிரவலின் விலை ரூபா 1,000 ஆக இருந்த போதிலும் 1 கியூப் ரூபா 1,875 படி 383 கிரவல் கியூப்களும், 1 கியூப் ரூபா 2,000 படி 500 கியூப்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பிரதேசத்தில் காணப்படுகின்ற விலைகளை மிகைத்து கிரவல் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக நிதியத்திற்கு ரூபா 835,125 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 253,950 பெறுமதியான 135.44 கியூப் கிரவல் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 1½ வருட காலம் பாதுகாப்பதற்ற களஞ்சியத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்ததுடன் அது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு இல்லாதிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பணிப்பாளர் நாயகத்தின் வாகனப் பாவனை

---

(i) 2013 சனவரி முதல் 2014 ஆகஸ்ட் வரையான காலத்திற்காக நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் ஓட்டப்படாத 5929 கிலோ மீற்றருக்காக ஓடியதாக போலியாகப் குறிப்புக்களை இட்டு ரூபா 137,214 பெறுமதியான 847 லீற்றர் எரிபொருள் மோசடியாகப் பெறப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதியில் உள்ளவாறு வாகனத்தின் மைலோ மீற்றர் 111,476 கி.மீற்றராக இருந்த போதிலும் ஓட்டக் குறிப்புக்களில் 117,405 கி.மீற்றர் ஓடப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மேலும் மேற்கூறப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் அவர் வெளிநாட்டில் இருந்த காலப்பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு அவரின் மனைவியின் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் 1795 கி.மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி 297 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.6 நோக்கத்திற்கு முரணான செலவினம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதி பதவிப் பிரமாணத்தின் 2 ஆவது நிகழ்விற்காக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக பத்திரிகை அறிவித்தல் கட்டணம் ரூபா 351,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரோயல் ஆசிய சங்கம் என்ற பெயரிலுள்ள வெளி தனியார் நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கலைச் சம்மேளனத்திற்காக அனுசரணைப் படியாக நிதியத்தால் ரூபா 400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 இனங்காணப்பட்ட நட்டம்

ஒப்பந்த உடன்படிக்கையின் படி முற்பணம் பிணைகள் மற்றும் செயலாற்றல் பிணைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அறவிடப்படவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளின் போது 2 தனியார் கம்பனியிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 1,705,055 தொகை அந்த வருடங்கள் முதல் தீர்க்கப்படாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்ததன் பின்னர் ரூபா 4,472,150 தொகை நிதியத்திற்குச் செலுத்துமாறு ஒரு கம்பனிக்கு நீதிமன்றத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அதனை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

## 4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

(அ) பொது முயற்சிகளின் நிதி வளங்கள் உள்ளடங்களாக ஏனைய வளங்கள் மேற்பார்வை அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்க முடியாதிருந்த போதிலும் 1989, 2000, 2001 மற்றும் 2011 ஆண்டுகளில் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் சேவைக்கு விடுவிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் பதவியணியினருக்குரிய 07 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போதும் அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக நிதியத்தால் செலுத்தப்பட்ட மொத்தச் சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,286,205 ஆகும்.

(ஆ) மத்திய கலாசார நிதியத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் பதவியில் 2013 ஆம் ஆண்டின் போது பதில் கடமையாற்றிய கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 110,847 பெறுமதியான நோட்புக் கணனி அவர் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சிலிருந்து 2013 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் இடம் மாற்றலாகிச் சென்ற போதிலும் 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் அது மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய கலாசார நிதியத்திற்குச் சொந்தமான கெப் வாகனமொன்று மீளாய்வாண்டின் மே முதல் செப்தெம்பர் வரை முழுமையான காலப்பகுதியில் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சரின் பதவியணியினரின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அக்காலத்திற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அநேகமான பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் பதில்கடமை/ கடமைகளை நிறைவேற்றல் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 74 ஆகும். அதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பதில் கடமை/ கடமைகளை நிறைவேற்றல் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,187,644 ஆக இருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து நிதியத்தால் வெற்றிடப் பதவிகளுக்காக தொடர்ச்சியாக பதில்கடமை/ கடமைகளை நிறைவேற்றல் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான காலம் அவ்வாறு கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 32 ஆகும்.

(இ) 2011 திசெம்பர் 02 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தவேண்டிய பதவிக்காக ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்த வேண்டியிருந்த போதிலும் இது வரையும் எவ்வித வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தற்காலிக அடிப்படையில் அகழ்வு/ பாதுகாப்பு பரிசோதகர்கள் இருவர் மாதாந்த படி ரூபா 45,000 வீதம் கொடுப்பனவு அடிப்படையிலும் 48 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 வீதம் மாதாந்த படி கொடுப்பனவு அடிப்படையிலும், பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பாதுகாப்பு விஷேட நிபுணர், புலனாய்வு உத்தியோகத்தர் என்போருக்காக மாதாந்தம் ரூபா 30,000 மற்றும் ரூபா 25,000 வீதம் படி செலுத்தும் அடிப்படையிலும் உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.10 வாகனப் பயன்பாடு

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூறுவிலை கோரல் மற்றும் வழங்குனர்களைத் தெரிவு செய்தல் வெளிப்படையாக அன்றி மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் 4 வேன் வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கான மாதாந்த வாடகை ரூபா 50,000, ரூபா 45,000 மற்றும் ரூபா 45,000 ஆக செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகன வழங்குனர்களுடன் எவ்வித எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த வாடகை ரூபா 50,000 தொகையான வேன் வண்டிக்காக மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்கு வாடகைச் செலவினமாக ரூபா 546,275 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வாடகை வாகனத்திற்கான மாதாந்த அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை ரூபா 40,000 ஆனமையால் அந்த 6 மாதங்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சிய வாடகைச் செலவினம் ரூபா 306,275 ஆகும். மேலும் வாகனத்தின் உரிமையாளரால் நிறைவேற்ற வேண்டிய சேவை மற்றும் டயர் மாற்றுதல் போன்றவையும் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) நிதியத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு 06 மாதங்களுக்கு ஒரு தடவை தகைமைபெற்ற பொறியியலாளரொருவரால் மேற்கொள்ளப்படுவதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டிற்காக ஒட்டுமொத்த நிறுவனத்தின் எரிபொருள் நுகர்வுச் செலவினம் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டையும் விஞ்சி 22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுக்காக ஆளுநர் சபையின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆளுநர் சபையால் நிதிக்கூற்றுக்களின் பொறுப்பு கையேற்கப்பட்டு அவை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 – 2016 காலப்பகுதிக்குரிய எல்லைக்குரிய கூட்டிணைந்த திட்டத்திற்காக ஆளுநர் சபையின் அங்கீகாரம் 2013 திசெம்பர் 03 ஆந் திகதியே கிடைத்திருந்தது.

**5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்திற்கு இணையாகும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தால் அந்த ஒவ்வொரு செயற்திட்டங்களிலும் நிறைவேற்றப்படுகின்ற அகழ்வுகள் மற்றும் பாதுகாப்புக்களுக்குரிய வேலைத்திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த நிறுவனத்தினதும் செயற்பாடுகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீடு ஆளுநர் சபையின் அங்கீகாரத்திற்காக 2013 திசெம்பர் 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஆளுநர் சபை அங்கீகாரம் 2013 திசெம்பர் 23 ஆந் திகதியே கிடைத்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் செலவினங்களைச் செய்தல் கட்டுப்பாடின்றி மேற்கொள்ளப்பட்டு ஆண்டின் இறுதியில் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு அளுநர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீடு மற்றும் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி உள்ளபடியான வருமானங்களையும் செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 22 சதவீதம் முதல் 187 சதவீதம் வரையிலான முரண்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பொலன்னறுவை புனித பூமியின் உள்ளக நுழைவு வீதியில் 1 கி.மீற்றர் நீளத்திற்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் ரூபா 38,709,100 தொகையில் ஒப்பந்தக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 28,255,312 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2012 இன் எனது அறிக்கையிலும் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) உரிய தரத்தைக் கொண்டிராத கொங்கிரீட் நிர்மாணத்திற்காக ரூபா 22,099,917 தொகை செலுத்தியமை

(ஆ) அளவிடைப்பத்திரங்களின் படி நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 4,660,998 தொகை செலுத்தியமை

(இ) ABC விகிதம் 40 சதவீதமும் கல்தூல் கலவை 50 சதவீதத்திற்கு குறைவாகவும் ஈடுபடுத்தியதன் காரணமாக வீதியை சமப்படுத்த முடியாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை.

**06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

----------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) சுற்றுலா நுழைவுச்சீட்டு அச்சீடும் கையிருப்புக் கட்டுப்பாடும்
(ஈ) கொள்வனவு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள்
(எ) வாகனப் பயன்பாடு
(ஏ) ஆலோசனைப் பணிப்பாளர்களையும் செயற்திட்டப் பணிப்பாளர்களையும் ஆட்சேர்த்தல்